குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 133/2023

அ.சா.3

2026–ம் ஆண்டு மார்ச் 05–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்தி | தொழில் | |
| தந்தை பெயர் | சக்திவேல் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.54 மணி,

Accused A1)Karthik, A2)Poovarasan are present. Advocate Mr.R.Balu present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் கசப்பேரியில் குடியிருந்து, விசைத்தறி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் சண்முகம் என்பவர் எனது மாமா. ஆஜர் எதிரிகளைத் தெரியும். இருவரும் எனது உறவினர்கள். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

2. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 24.04.2022 ஆம் தேதி இரவு 07.00 மணியளவில் புகார்தாரர் சண்முகம் அவரது வீட்டில் இருந்தபோது, ஆஜர் எதிரிகள் அவரை கெட்ட வார்த்தையால் திட்டி, 1 ஆம் கையால் புகார்தாரர் சண்முகம் என்பவரின் முதுகில் அடித்து, 2 ஆம் எதிரி காலால் புகார்தாரரை உதைத்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு விசாரணையின்போது மேற்கண்ட சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.05 17:26:39 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 11.58 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.05 17:26:43 +0530